நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொறுப்பு), மதுரை மண்டலம், மதுரை அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு.சு.ப.முகமது அலி, பி.இ.,எம்.பி.ஏ.,

ந.க.எண். 58/2017 மம 4

நாள். 21.03.2017
துன்முகி வருடம் பங்குனி - 08
திருவள்ளுவர் ஆண்டு-2048

ஐயா,

பொருள் : நகர் ஊரமைப்பு துறை - மதுரை மண்லம் - விருதுநகர் மாவட்டம் - காரியாபட்டி வட்டம், காரியாபட்டி பேரூராட்சி, கட்டுகுத்தகை காசிசல்குளம் கிராமம் - சர்வே எண்கள். 66/8C1, 66/16B2, 66/16C2 மற்றும் 66/17 -ல் 8600.00 ச.மீ பரப்பளவுள்ள மனையிடத்தில் உத்தேச தரை மற்றும் முதல் தளத்துடன் கூடிய பள்ளி கட்டுமான கட்டிட வரைபட தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை :

1. செயல் அலுவலர், காரியாபட்டி பேரூராட்சி, அவர்களின் கடிதம் ந.க.எண். 190/2016 நாள். 02.01.2017.
2. மனுதாரர் திரு.மணிகண்டன், நிறுவனர் ஸ்ரீ சபரி கல்வி அறக்கட்டளை விண்ணப்பம், நாள்: 02.01.2017.
3. இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 58/17 மம4 நாள். 07.03.2017.
4. மனுதாரர் நன்னிலை வரி, உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் கட்டணம் செலுத்திய நாள். 16.03.2017.

*****

உத்தரவு :

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம், காரியாபட்டி பேரூராட்சி, கட்டுகுத்தகை காசிசல்குளம் கிராமம், சர்வே எண்கள். 66/8C1, 66/16B2, 66/16C2 மற்றும் 66/17 -ல் 8600.00 ச.மீ பரப்பளவுள்ள மனையிடத்தில் தரைத்தளம் மற்றும் முதல் தளங்களுடன் உத்தேச பள்ளி கட்டிடம் அமையும் மனையிடத்திற்கு **'ABCDEFJHIJK'** என எல்லையிட்டு மனையிட அனுமதியும் அம்மனையில்,

(உத்தேச பள்ளி கட்டுமானப் பரப்பளவு)

தரைதளம்	-	2367.65 ச.மீ
முதல் தளம்	-	1834.36 ச.மீ
மாடிப்படி அறை	-	108.11 ச.மீ
மொத்தம்	-	**4310.12 ச.மீ**

பரப்பளவு கொண்ட உத்தேச பள்ளி கட்டுமான வரைபடத்திற்கு **க.வ/ந.ஊ.து.இ.(மம). எண். 15/2017** என எண்ணிடப்பட்டு கீழ்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கட்டிட ஒப்புதல் வழங்க இசைவு அளிக்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்

1. அரசாணை எண்.161, வீட்டு வசதி மற்றம் நகர்புற வளர்ச்சித் துறை, நாள்.20.06.2013-ன் படி கட்டிட அனுமதிக்கு இட அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள வரிசை எண். 1,2,3 மற்றும் 4 என எண்ணிடப்பட்டு 936.77 ச.மீ (10.9%) OSR ஆக வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. அத்திறவிடத்தினை Should be earnmarked and kept open to sky

without any construction with the condition that open space Reservation area should be utilized only as a park and not as a play ground by the concerned institutions.

2. It is the responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
3. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
4. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை, தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம் குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

நிபந்தனைகள் :

1. உத்தேச பள்ளி கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. இட அமைப்பு வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிட ங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகன ங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டிக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண்.341/ந.நி. மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்.3.11.04-ன்படி செப்டிக் டேங்க்கில் "U Trap" அமைத்தல் வேண்டும்.

10. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FIY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12. கட்டிடம் கட்டப்படும் பொழுது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் வயரிங் செய்யப்பட வேண்டும்.
13. அரசாணை எண். 17 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை UD4(3), நாள். 05.02.2016- ன்படி உத்தேச பள்ளி கட்டிடத்தின் Terrace தளத்தில் மூன்றில் ஒரு பங்கு அளவிற்கு குறையாமல் சோலார் எனர்ஜி சிஸ்டம் கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும்.

மனுதாராரிடமிருந்து அரசுக்கு செலுத்த வேண்டிய உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் கட்டணம் மற்றும் நன்னிலைவரி முழுமையாக பெறப்பட்டுள்ளது. எனவே உத்தேச பள்ளி கட்டுமானத்திற்கு இறுதி ஒப்புதல் வழங்கும் பொருட்டு தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்ட இரண்டு தொகுப்பு வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பபடுகிறது. மனுதாரருக்கு மேற்கொண்டு உத்தரவு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை சான்று அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மனுதாரர் கட்டிட வரைபடங்களுக்கு இறுதி ஒப்புதல் தொடர்பாக செயல் அலுவலர், காரியாபட்டி பேரூராட்சி, விருதுநகர் மாவட்டம் அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
மதுரை மண்டலம்.

21/3/17

இணைப்பு
ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்கள்
இரண்டு தொகுப்பு.

பெறுநர்
செயல் அலுவலர்,
காரியாபட்டி பேரூராட்சி,
விருதுநகர் மாவட்டம்.

நகல்
1. திரு.மணிகண்டன்,
   நிறுவனர் ஸ்ரீசபரி கல்வி அறக்கட்டளை,
   காரியாபட்டி,
   விருதுநகர் மாவட்டம்.
2. தொழில்நுட்ப வைப்பறை - செயலாணைக் கடிதம் மற்றும் வரைபடம்.